**செய்தி வெளியீடு எண்.810** **நாள்.29.9.2008**

வாழ்வாதாரத்திற்கு வேளாண்மை மீது உள்ள நம்பிக்கையினை இழக்கும் நிலையில் இருந்த தமிழக விவசாயிகள் பயிர் மேலாண்மையில் தற்போது உள்ள நவீனத் தொழில்நுட்பங்களினால் புது நம்பிக்கை பெற்று திரும்ப தங்களது பாரம்பரியத் தொழிலான வேளாண்மையை பெருமளவில் மேற்கொண்டுள்ளனர். குறுவை நெல் அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் கிடைத்திருக்கும் உயர் மகசூலினால், விவசாயிகள் மீண்டும் பெரும் மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் பெற்றுள்ளனர்.

நெல்லில் எக்டேருக்கு, இதுவரை சராசரியாக கிடைக்கப் பெற்ற 5.40 மெ.டன் உற்பத்தித் திறனைவிட, தற்போது எக்டேருக்கு 7.50 மெ.டன் என்ற அளவிற்கு உற்பத்தித் திறனைப் பெற்று, நெல் உற்பத்தியில் சாதனையை அடைய அனைத்து வாய்ப்புகளும் உள்ளன. வேளாண்மை ஆணையர், திரு.எஸ். கோசலராமன் அவர்கள் இச்சாதனை மாநிலத்தின் வரலாற்றில் இதுவரை அடைந்திராத ஒன்று என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, எக்டேருக்கு 14.27 மெ.டன் அளவிற்கு இதுவரை இல்லாத உயர்மட்ட நெல் மகசூலை பெற்றதன் மூலம், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுக்காவில் திரு. எம். கணேசன் என்ற விவசாயி வேளாண்மை தொழிலில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்திற்கான அறிகுறி சென்ற ஆண்டே தெரிந்தது எனத் தெரிவித்தார். விழுப்புரம் மாவட்டம், சின்னச்சேலம் பகுதியைச் சேர்ந்த திரு.டி. இளங்கோவன் என்ற மற்றொரு விவசாயி 13.38 மெ.டன் மகசூல் எடுத்துள்ளார். திரு. கணேசன் அவர்கள் " செம்மை சாகுபடி தொழில்நுட்பம் எனக்கு மிகவும் புதியது. எனது வயலில் அனைத்துச் சாகுபடி முறைகளையும் வேளாண்மை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்தனர். இத்தகைய புதிய தொழில்நுட்பம் பற்றி வேளாண் தொழிலாளர்களுக்கு அவர்கள் அளித்த பயிற்சி பெரும் சவாலாக இருந்தது. இத்தகைய முயற்சிகளின் பலன்களை, அறுவடை சமயத்தில் அதிக மகசூல் மூலம் பெற்றோம்" என்கிறார்.

நடப்புப் பருவத்தில் அவரின் முந்தைய சாதனையைவிட அதிகமாக பெற அனைத்து முயற்சிகளையும் எடுத்ததாகவும், " ஆனால் அறுவடை சமயத்தில் பெய்த மழையினால் பயிர் பாதிக்கப்பட்டு, நெல் மணிகள் உதிர்ந்த போதும், எக்டேருக்கு 10.50 மெ.டன் எடுத்துள்ளேன். இதுவே நல்ல மகசூல் தான்" என திரு. கணேசன் மேலும் தெரிவித்தார்.

மாநிலத்தின் இதர பகுதிகளிலும் இருந்தும் இதே மாதிரியான உயர்ந்த மகசூல் பெறப்பட்டது பற்றிய செய்திகள் வந்திருக்கின்றன. தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரியைச் சார்ந்த திரு. எஸ். முருகன் மற்றும் திரு.டி.காந்தி என்ற இரு விவசாயிகள் எக்டேருக்கு முறையே 9.74 மற்றும் 9.44மெ.டன் மகசூல் எடுத்துள்ளனர். நெல்லுக்கான கொள்முதல் விலையினை மாநில அரசு கிலோவிற்கு ரூ.10/– என உயர்த்தி உள்ளதால், இரண்டு எக்டேர் பரப்பில் பயிரிட்டுள்ள திரு. முருகன் அவர்களுக்கு சுமார் ரூபாய் இரண்டு இலட்சம் வரை வருமானம் கிடைக்கும். இதைக் கொண்டு அவரின் குழந்தைக்கு நகைகள் வாங்க திட்டமிட்டுள்ளதாகவும், கடனாகப் பெற்ற ரூ.40,000/–ஐ திரும்ப அடைப்பேன் எனவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

திரு. காந்தி வசதியானவர். அதிகப் பரப்பில் சாகுபடி செய்யும் ஒரு விவசாயி. நெல்லின் மகசூலினை கண்காணிப்பதற்காக, வேளாண்மைத்துறையும், புள்ளியியல் துறையும் இவரது வயலை ஏதேச்சை முறையில் தேர்வு செய்துள்ளனர். எனினும், அருகில் உள்ள திரு. ஜான் செல்லையா என்ற விவசாயி, எக்டேருக்கு 10.4 மெ.டன் மகசூல்

எடுத்துள்ளார். இவரில் வயல் ஏதேச்சை முறையில் தேர்வு செய்யப்படாததால் இந்த மகசூல் பதிவு செய்யப்படவில்லை என வேளாண்மை உதவி இயக்குநர் திரு.டி. பாரதி தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும், வேளாண்மைத்துறை அலுவலர்களும், விவசாயிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டதே இத்தகைய சாதனைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பத்தில் அனுபவம் வாய்ந்த ஆராய்ச்சியாளரான திரு.பி.ஜே. பாண்டியன் என்பவர் கூறுகையில், மாநிலத்தில் நடப்பு குறுவைப் பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள 3.21 இலட்சம் எக்டேர் பரப்பளவில், ஏறக்குறைய, 1.51 இலட்சம் எக்டேர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப முறை பின்பற்றப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பத்தில், சான்று விதைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 15 நாட்கள் வயதுடைய நெல் நாற்றுகள் மட்டுமே நடவு செய்யப்பட்டது. பொதுவாக, ஒரு குத்துக்கு 4 முதல் 5 நெல் நாற்றுகளை விவசாயிகள் நடுவார்கள். இத்தொழில்நுட்பத்தில் குத்துக்கு ஒரேஒரு நெல் நாற்று மட்டுமே நடப்படுகிறது. வரிசைக்கு வரிசை போதிய இடைவெளி விடப்படுகிறது. பாசன நீர், உரம், பூச்சி மருந்துகள் பயிரின் தேவைக்கேற்ப மட்டுமே உபயோகப்படுத்தப்படுகிறது. வழக்கமான சாகுபடி முறையில் 30 முதல் 40 தூர்கள் மட்டுமே பிடிக்கும். ஆனால், இத்தொழில்நுட்பத்தில் ஒரு நாற்றிலிருந்து 60 முதல் 70 தூர்கள் வந்து அபார விளைச்சல் கிடைக்க வழி செய்கிறது. சுருக்கமாக சொன்னால் இம்முறையினால் சாகுபடி செலவு ரூ.3000/– முதல் ரூ.4000/– எக்டேருக்கு குறைகிறது என்பதோடு, மகசூல் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு கிடைக்கிறது. செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் பின்பற்றப் படாத வயல்களிலும்கூட, சான்று விதை, களையெடுக்கும் கருவி உபயோகத்தினால் மகசூல் அதிகமாக கிடைத்துள்ளது.

இந்த வெற்றிக்கான வழிமுறைப் பற்றி வேளாண்மைத்துறை செயலர் திரு. சுர்ஜித் கே. சௌத்ரி அவர்கள் கூறுகையில், " விவசாயிகளை அதிகளவில் தொடர்பு கொள்ளும் வகையில் வேளாண்மைத்துறை மறுசீரமைக்கப்பட்டு, மாநிலம் மற்றும் மாவட்ட தலைமையிடங்களிலிருந்து 8000க்கும் அதிமான அலுவலர்கள் கிராமப் புறங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் வேளாண்மை பல்கலைக் கழகம் உருவாக்கிய புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தியுள்ளனர். செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் மட்டுமல்லாது, துல்லிய பண்ணைய முறை போன்ற அறிவியல் ரீதியான தொழில்நுட்ப முறைகளை விரிவாக்க அலுவலர்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி வருகின்றனர். வேளாண்மைத் தொழிலை ஒரு நிலையான வளமான மற்றும் அதிக லாபம் தரும் தொழிலாக மாற்றுவதே எங்கள் நோக்கம்" என்றும் தெரிவித்தார்.

வேளாண்மை ஆணையர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.